பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

16 03 2025 **SUNDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வடகிழக்கு மாநிலங்களில் புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஆய்வு செய்கிறார்.

2. நாட்டின் வளர்ச்சியில் கல்வி முக்கிய அங்கமாக திகழ்வதாக மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

3. தேசிய தடுப்பூசி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. நியூஸிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோபர் லக்ஸான், ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

5. ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து ஏமன் தலைநகர் **Sanaa**-மீது அமெரிக்கா நடத்திய வான்வழி தாக்குதலில் 24 பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

வடகிழக்கு மாநிலங்களில் புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஆய்வு செய்கிறார்.

அஸ்ஸாம் மாநிலம், குவஹாத்தியில் திரு. அமித் ஷா தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வுக் கூட்டத்தில் வடகிழக்கு மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கத்தின் நிலை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, அனைத்து **Bodo** மாணவர்கள் சங்க ஆண்டு மாநாட்டில் திரு. அமித் ஷா பங்கேற்று உரையாற்றுகிறார்.

>>>>>><<<<<<

நாட்டின் வளர்ச்சியில் கல்வி முக்கிய அங்கமாக திகழ்வதாக மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், சாதி, மத அடிப்படையிலான அரசியல் இருக்கக்கூடாது என்பதில் தாம் உறுதியுடன் உள்ளதாக தெரிவித்தார்.

கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், அதன் மூலம் வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டு சமூகம் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்காற்ற முடியும் என்று கூறினார்.

தகுதி அடிப்படையில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு. நிதின் கட்கரி வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

தேசிய தடுப்பூசி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நோய்த் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 16ஆம் தேதி இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், குழந்தைகளை நோயிலிருந்து பாதுகாப்பதை இலக்காக கொண்டு நாடுமுழுவதும் தடுப்பூசி இயக்கம் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் மாநில அரசுகள் மற்றும் முன்கள சுகாதாரப் பணியாளர்களுடன் இணைந்து மத்திய சுகாதார அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்திர தனுஷ் தடுப்பூசி இயக்கத்தின் மூலம், முழுஅளவிலான நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்து, நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் நோக்கில் இந்த இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நியூசிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோபர் லக்ஸான், ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நியூசிலாந்து பிரதமர், நாளை பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

பின்னர், புதுதில்லியில் நடைபெறும் 10வது ரெய்ஸினா மாநாட்டில் நியூஸிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோபர் லக்ஸான் தலைமை விருந்தினராக பங்கேற்று உரையாற்றுகிறார்.

இதனையடுத்து, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

பின்னர், மும்பை செல்லும் அவர் அங்கு வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடுகிறார்.

அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள் துறை சார்ந்த உயரதிகாரிகள், வர்த்தக மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தியா வருகின்றனர்.

**>>>>>><<<<<<**

தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான ஆசிய நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டம் புதுதில்லியில் இம்மாதம் 19 மற்றும் 20ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இந்தியா மற்றும் மலேசிய நாடுகளின் தலைமையில் நடைபெறவுள்ளது.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான திட்டங்களை வகுப்பது குறித்து இதில் விவாதிக்கப்படவுள்ளது.

இதில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்புப் படைகளின் அனுபவங்களும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தக் கூட்டத்தில் புருனே, கம்போடியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட 10 நாடுகளும், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஜப்பான் உள்ளிட்ட 8 நட்பு நாடுகளும் பங்கேற்கின்றன.

**>>>>>><<<<<<**

ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து ஏமன் தலைநகர் **Sanaa-**மீது அமெரிக்கா நடத்திய வான்வழி தாக்குதலில் 24 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் **Saada-**வில் உள்ள **Kahza** பகுதியில் 11 பேரும், **Sanaa-** வில் 13 பேரும் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பிறகு. மேற்காசியாவில் அமெரிக்க மேற்கொண்ட மிகப் பெரிய ராணுவ நடவடிக்கை இதுவாகும்.

செங்கடல் பகுதியில் இஸ்ரேல் நாட்டு கப்பல்கள் மீது மீண்டும் நடத்தப்போவதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் விடுத்த அச்சுறுத்தலை அடுத்து அமெரிக்கா இந்த வான்வழி தாக்குதலை நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

ஏழைகளின் எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு ஜீவன்ஜோதி பீமயோஜனா காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

விபத்து மற்றும் இயற்கை மரணம் ஏற்பட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு 2 லட்சம் ரூபாய்க்கான நிதியுதவி கிடைக்க இந்த காப்பீடு வகை செய்வதாக வேலூர் மாவட்ட முன்னோடி வங்கி பொது மேலாளர் திரு. ஜமால் மொய்தீன் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

சிவகங்கை மாவட்டத்தில் பேறுகால உயிரிழப்புகளை குறைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக அம்மாவட்டத்தில் உள்ள கர்ப்பிணிகளுக்கு மாதாந்திர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உயர்தர சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

உத்ராகண்ட் மாநிலம், **Tanakpur**–ல் புகழ்பெற்ற **Maa Purnagiri** கண்காட்சியை அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமி நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், உத்ராகண்ட் மாநிலத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

பேரிடர் மேலாண்மை மற்றும் பண்டிகை காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில், **Thooligad-** ல் நவீன கட்டுப்பாட்டு அறை மற்றும் சிசிடிவி கண்காணிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மாவட்ட நீதிபதிகள், காவல்துறை அதிகாரிகள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளை ஒருங்கிணைத்து, பல்நோக்கு நிர்வாக அமைப்பு உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மாநிலத்தில் உள்ள கோவில்களை புனரமைக்கும் பணிகள், சாலை விரிவாக்கம் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. புஷ்கர் சிங் தாமி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சத்திஷ்கர் மாநிலம், **Balod** மாவட்டத்தில் இருசக்கர வாகனம், டிரக் மீது மோதி ஏற்பட்ட விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

நேற்றிரவு தங்களது சொந்த கிராமத்திற்கு சென்று விட்டு, வீடு திரும்புகையில் சாலையில் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

ஒடிசா மற்றும் கட்ச் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடுமையான வெப்ப அலை நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜார்க்கண்ட், மேற்குவங்கம், சத்திஷ்கர், விதர்பா, தெலங்கானா மற்றும் கர்நாடகாவின் ஓரிரு இடங்களில் இன்று வெப்பநிலை அதிகரித்து காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

கடலோர ஆந்திரப்பிரதேசம், கேரளா, ஏனம், மாஹே ஆகிய பகுதிகளில் ஓரிரு இடங்களில் அடுத்த 3 தினங்களுக்கு அதிக வெப்பநிலை நிலவக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் அடுத்த 4 நாட்களுக்கு சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், ஓரிரு இடங்களில் பனிப்பொழிவு நிகழக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>>END<<<<<<